செ.வெ.எண்:23 நாள்:12.04.2019

# <u>செய்தி அறிவிப்பு</u>

18-04-2019 அன்று நடைபெறவுள்ள 2019 பாராளுமன்றத் தேர்தலில் காவல்துறைக்குத் துணையாக பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ள கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த விருப்ப விண்ணப்பம் சமர்ப்பித்த முன்னாள் படைவீரர்கள் / இளநிலை படை அலுவலர்கள் மற்றும் விருப்ப விண்ணப்பம் சமர்ப்பிக்காத தேர்தல் பணிக்கு செல்ல விருப்பமுள்ள முன்னாள் படைவீரர்கள் / இளநிலை படை அலுவலர்கள் அதற்கான ஆயத்தங்களுடனும், அசல் படைவிலகல் சான்று மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றுடன் **கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள ஆயுதப்படை** மைதானத்தில், **16-04-2019 அன்று காலை 08.00 மணிக்கு** ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் 9003829969 என்ற கைபேசி எண்ணில் தொடர்புகொண்டு விவரத்தினை தெரிந்துகொள்ளலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த. அன்பழகன்,இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக்கொள்கிறார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்.**